

# நீங்கள் ஒரு தவறான உறவில் சிக்கிக் கொள்ள விரும்புகிறீர்களா?

ஓர் உறவை விட்டு வெளியேற முடியாது என்று நீங்கள் நினைக்கும் நேரங்கள் உள்ளன. அது துஷ்பிரயோகம் என்று உங்களுக்குத் தெரிந்தாலும்கூட நீங்கள் அந்த உறவைத் தொடர்கிறீர்கள்.

ஆனால் அன்பினால் துஷ்பிரயோகம் செய்யப்படும் உறவில் நீங்கள் நீடிக்க வேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்ட பிரச்சினைகளைப் பற்றி வெளிப்படையாக விவாதிப்பதும் அப்பிரச்சினைகளிலிருந்து உங்களைத் தூர விலக்கிக் கொள்வதும் தேவைப்படும்போது தொழில்முறை உதவியை நாடுவதும் மிக முக்கியமாகும்.

ஓர் உறவில் நீங்கள் இவ்வாறான உடல் அல்லது உள ரீதியான துஷ்பிரயோகத்திற்கு முகங்கொடுக்க நேரிட்டால், அது ஒரு தவறான உறவு என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

- உங்களை சங்கடப்படுத்தும் தொடர்ச்சியான கடினமான சொற்பிரயோகங்கள்.
- நீங்கள் ஒரு சிக்கலில் இருக்கும்போது உங்கள்மீது குற்றம் சுமத்தப்படல்.
- உங்களை அடிக்கடி அவமானப்படுத்தல் மற்றும் தாழ்வு மனப்பான்மைக்கு உட்படுத்தல்.
- உங்களின் இமெயில் மற்றும் சமூக வலைத்தளங்களின் கடவுச்சொல்லை கேட்டல்.
- உங்களை விட்டுச் செல்வேன் என மிரட்டுதல்.
- தேவையின்றி உங்கள் மீது சந்தேகம் கொள்ளல்.
- உங்களுக்கு விருப்பமில்லாத ஒன்றை செய்வதற்கு வற்புறுத்தல்.
- உங்களின் விருப்பமின்றி பாலியல் ரீதியான விடயங்களில் ஈடுபட வற்புறுத்தல்.
- உங்களின் ஆடை, நண்பர்கள் தனிப்பட்ட விடயங்களில் அநாவசியமாக தலையிடுதல்.
- உங்களின் பணம், சொத்து என்பவற்றை அபகரிக்க முயற்சித்தல்.

தனிப்பட்ட உறவுகளில் மரியாதையுடன் நீங்கள் நடத்தப்பட உங்களுக்கு உரிமை உண்டு. முதலில், உங்கள் இருவருக்கும் இடையே வெளிப்படையாகப் பேசுவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி செய்யுங்கள். அது பலனளிக்கவில்லை என்றால், ஒரு உறுதிப்பாட்டிற்காக நம்பகமான நபர் அல்லது மூன்றாம் தரப்பினரின் உதவியை நாடுவது நல்லது.

விவாகரத்து காரணமாக நீங்கள் மிகுந்த மன உளைச்சலையோ அல்லது உளத்தாக்கத்தையோ எதிர்நோக்கினால், அதற்குரிய ஆலோசனை மற்றும் உள ரீதியான ஆதரவினை பெறுவதற்கு உங்கள் அருகிலுள்ள யொவுன் பியச / மித்துரு பியச நிலையத்திற்கு வாருங்கள்.